செங்கையாழியானின் வட்டாரப்பண்பு நாவல்களில் நாட்டார் பண்பாட்டுக்கூறுகள் - ஓர் ஆய்வு

கலாநிதி. கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்

முன்னுரை

ஈழத்து நவீன இலக்கியப் படைப்பாளர்களுள் குறிப்பாக நாவல் இலக்கியப் படைப்பாளர்களுள் முதன்மை பெற்று விளங்குபவர் "செங்கையாழியான்" என்ற புனைப்பெயரில் எழுதிவரும் கலாநிதி க. குணராசா என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. இந்த முதன்மைக்கு பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டுச் சொல்லாம்.

ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் 1960களுக்குச் சற்று முன்பின்னாக நாவல் இலக்கியம் படைக்கத் தொடங்கிய செங்கையாழியான் ஏறத்தாழ அக்காலப் பகுதியிலேயே தனித்துவமான ஒரு படைப்பாளியாகத் தன்னை நிலைநிறுத்தியும் கொண்டார் எனலாம்.

ஈழத்தின் இன்றைய நாவலாசிரியர்களுள் கணிசமான நாவல்களைப் படைத்த பெருமையும் இவரையே சாரும். இவருடைய நாவல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான கருக்களைக் கொண்டமைந்துள்ளமையானது பிறிதொரு சிறப்பம்சமாகும்.

அமரர் கே. டானியலின் வெற்றிடத்தினை நிரப்பக் கூடியவராக எண்ணப்பட்டு வரும் செங்கையாழியான் தரமான பல நாவல்களைப் படைத்துள்ளார் என்பதனை விமர்சகர்கள் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். "வாடைக்காற்று", "காட்டாறு" முதலான நாவல்கள் இவரது படைப்பு நுட்பத்துக்கான மிகச்சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். "வாடைக்காற்று" என்ற நாவல் சந்தித்த பல்வேறு தரப்பட்ட விமர்சனங்களை ஈழத்தின் எந்தவொரு நாவலும் சந்திக்கவில்லை என்றே கூறலாம். [1]

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் "வாசகரஞ்சம்" என்ற கோட்பாட்டை வளர்த்தவர்களுள் செங்கையாழியானுக்கு கணிசமான பங்குண்டு. அத்துடன் ஈழத்தின் மிகச்சிறந்த நாவலாசிரியரான கே. டானியலைப் போல தனக்கெனத் தனியான ஒரு "வாசகர் குழாத்தினை"யும் இவர் உருவாக்கி வைத்துள்ளார். இவ்வாறான ஒரு வாசகர் குழாத்தினை உருவாக்கி நிலை நிறுத்திய ஈழத்துப் படைப்பாளிகள் ஒரு சிலரே எனலாம்.

செங்கையாழியான் என்ற படைப்பாளிக்கு ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் முதன்மையிடம் கிடைத்ததில் அவர் படைத்த வட்டாரப்பண்பு நாவல்களுக்கும் கணிசமான பங்குண்டு. ஈழத்துத் தமிழர் தம் சமூக பண்பாட்டுக் கூறுகளைத் தன்னுடைய வட்டார வழக்கு நாவல்களில் உள்வாங்கியதனூடே அவற்றுக்கு இலக்கிய வாழ்வளித்த பெருமையும் இவரைச் சார்ந்ததாகும்.

செங்கையாழியானின் வட்டாரப்பண்பு சார் நாவல்களில் குறிப்பாக "வாடைக்காற்று", "காட்டாறு", "முற்றத்து ஒற்றைப்பனை", "காவோலை", "கிடுகுவேலி" ஆகிய நாவல்களில் பயின்று வந்துள்ள நாட்டார் பண்பாட்டுக் கூறுகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

வட்டாரப்பண்பு நாவல்

வட்டாரப்பண்பு நாவல் என்ற சொற்றொடர் பிரயோகம் பொதுவாக தமிழ் நாட்டிற்கே உரியதொன்றாகும். ஈழத்தில் இவ்வகை நாவல்களைப் பிரதேசப்பண்பு நாவல்கள்,

மண்வாசனை நாவல்கள் எனக் குறிப்பிடுவதே வழக்கமாக உள்ளது.

பிரதேசப்பண்பு நிலவியலுடன் தொடர்புபட்டது. குறிப்பிட்ட பகுதி வாழ் மக்களை அவர்கள் வாழும் மண்ணைக் களமாகவும் அவர்களது வாழ்வியல் நடைமுறைகளைக் கருவாகவும் கொண்டு பின்னப்படும் நாவல்களைப் பிரதேசப்பண்பு நாவல்கள் அல்லது வட்டாரப்பண்பு நாவல்கள் என அழைக்கலாம். இவ்வகையான நாவல்களிலோ சில பிரத்தியேகமான தன்மைகள், தனித்துவமான நடைமுறைகள் அவர்களுக்கென அமைந்துபோன சில நிர்ப்பந்தங்கள் முதலானவை செவ்வனே தெரியும் சமுதாய உண்மை நலம் நேர்க்கட்சியாக நாவலாசிரியரால் காணப்பட்டு உள்ளவை உள்ளவாறே எழுதப்படும்.

வட்டாரப்பண்பு நாவல்களின் பண்பு குறித்து விளக்கும் தா. வீரசாமி...

"நாவலின் களத்தையும தனித்தன்மைகளையும் கண்டு உள்ளவாறே படம்பிடித்து விடுவதுடன் கதை நிகழும் மண்ணின் மணத்தையும் மக்கள் வடித்த சொல்லையும் குழைத்து தருவது இதன் புதிய போக்கு" [3]

எனக் குறிப்பிடுகின்றார்.

வட்டார நாவல்களின் பொதுவான பண்புகளைத் துரை மனோகரன் பின்வருமாறு வரையறுக்கின்றார்.

> "நாவல் துறையைப் பொறுத்தவரை மண்வாசனையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுபவை பிரதேச நாவல்கள் (Regional Navels) எனப்படும். பிராந்திய நாவல்கள், வட்டார நாவல்கள், மண்வாசனை நாவல்கள் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றன. இலக்கியத்துறைக்கு முதன்மையான களமும் அதனோடு பின்னிப்பிணைந்து இறுகிமுறுகிப் பிரிக்கவியலாது இரண்டறக்கலந்து காணப்படும் பிற விடயங்களும் ஒரு நாவலில் முழுமை பெற்றிருந்தால் அதனைப் "பிரதேசநாவல்" என்ற அடைகொடுத்து அழைக்கலாம்."[4]

ஆய்வுக்குரிய நாவல்களின் கதை நிகழ்களம்

"வாடைக்காற்று" என்ற நாவல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நெய்தல் நிலத்தீவுகளில் ஒன்றான நெடுந்தீவினைக் களமாகக் கொண்டமைந்துள்ளது. அதிக வளமற்றதும் வரண்ட பிரதேசமுமான இத்தீவின் பௌதீகப் பின்புலத்தினூடே வாடைப் பருவத்திலே இடம்பெயர்ந்து மீன்பிடிக்கும் மீனவரிடையே நிகழும் தொழில் முறைகள், பூசல்கள், காதல் அனுபவங்கள், போராட்டங்கள் முதலானவை சித்திரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிறிதொரு தீவான அனலை தீவுக் கிராமத்தின் தனித்துவமான சூழலைச் சித்திரிப்பதாக "காவோலை" என்ற நாவல் அமைந்துள்ளது.

"காட்டாறு" என்ற நாவல் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள செட்டிகுளம் என்ற கிராமத்தினைக் களமாகக் கொண்டமைந்துள்ளது. நாவலில் இக்கிராமம் "கடலாஞ்சி" என்ற புனைபெயரால் சுட்டப்படுகிறது. யாழ்ப்பாணம், தீவுப்பகுதிகள், மலையகம் முதலான பல்வேறு பிரதேசங்களிலிருந்து விவசாய தொழிலை மேற்கொள்ள வந்த பல்வேறு நிலைப்பட்ட மக்களது வாழ்க்கைமுறை, தொழில்முறை, மனப்போராட்டங்கள், காதல், நட்பு முதலானவற்றை இந்நாவல் அக்கிராமத்துக்கே அமைந்துபோன கருப்பொருட் பின்னணிகளுடன் விவரிப்பதாக அமைந்துள்ளது.

முற்றத்து ஒற்றைப்பனை, கிடுகுவேலி ஆகிய நாவல்கள் யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பிரதேசங்களைக் கதை நிகழ்களமாகக் கொண்டமைந்துள்ளன. அழிந்து போகின்ற யாழ்ப்பாணத்து நாட்டார் கைவினைக்கலை ஒன்றைக் கட்டிக்காப்பதில் ஒரு முதியவருக்குள்ள மனவைராக்கியத்தினை முற்றத்து ஒற்றைப்பனை வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்து சாதி, சமய, உள்ளக முரண்பாடுகளையும், தனிப்பட்ட குடும்பப்

பிரச்சனைகளையும் அடுத்தவருக்குப் புலப்படா வண்ணம் வேலிபோட்டு (திரை) மறைக்கும் கிடுகுவேலி கலாசாரத்தையும் "கிடுகுவேலி" என்ற நாவல் வெளிப்படுத்தி நிற்கிறது.

மேலே காட்டிய நாவல்கள் தீவுப்பகுதி, வன்னி, யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகள்) ஆகிய பிரதேசங்களைக் களமாகக் கொண்டமைந்துள்ள தன்மையைக் காணமுடிகிறது. இம்மூன்று பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களிடையேயும் பொதுமையான பண்பாட்டு வழக்காறுகளுக்கு அப்பால் தனித்துவமான சில பண்பாட்டு நடைமுறைகளையும் அவதானிக்க முடியும். செங்கையாழியான் தனது வட்டாரப்பண்பு நாவல்களில் கதை நிகழ்கின்ற பிரதேசங்களுக்கே உரிய சமூகப் பண்பாட்டுக் கூறுகளை மிகத் துல்லியமாக அவதானித்துப் பதிவு செய்துள்ளமையினையும் பரந்துபட்டுக் காணமுடிகின்றது அவற்றில் சிலவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

அ) நாட்டார் நம்பிக்கை
ஆ) நாட்டுப்புற உணவு வகைகளும் உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளும்
இ) நாட்டார் கைவினைக் கலை
ஈ) நாட்டார் விளையாட்டு
உ) நாட்டார் மருத்துவம்
ஊ) பட்டப் பெயரிடும் வழக்கம்
எ) பேச்சு மொழிப் பிரயோகம்

நாட்டார் நம்பிக்கை

"நாட்டுப்புற நம்பிக்கை" என்பது நாட்டார் வழக்காற்றியலின் அடிப்படைப் பொதுக்கூறாக (Common Denominator) உள்ளது. அறிவு இல்லாத நிலையில் ஆய்வுப் பொருளை **நோக்கிய** ஏற்பு அல்லது இசைவுக்கான **மனப்பான்மையை** நம்பிக்கை எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். [5]

பிள்ளையை விற்றுவாங்குதல்

ஈழத்தமிழரிடையே பிறப்புத் தொடர்பாக நிலவிவரும் நம்பிக்கைகளில் "குழந்தையை விற்று வாங்கும்" நம்பிக்கை பிரதானமான ஒன்றாக உள்ளது. பிறந்த குழந்தையின் ஜாதகமும் பெற்றோரின் ஜாதகமும் ஒன்றுக்கொன்று பொருந்தி வராவிடின் அக்குழந்தையை ஏதாவது ஒரு கோவிலில் "விற்றுவாங்கும்" வழக்கம் யாழ்ப்பாணத்து தமிழரிடையே பெருவழக்காக உள்ளது.

"காவோலை" என்ற நாவலில் வரும் சுப்பிரமணியம் தனது மகனை ஐயனார் கோயிலில் விற்றுவாங்கிய செயற்பாட்டினைப் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

"கேட்பதற்கு எவருமில்லை குழந்தை நூறு ருபாவுக்கு விலை போனது சுப்பிரமணிபிள்ளை தர்ம கத்தாவிடம் பணத்தைப் பெருமையுடன் கொடுத்து விட்டு குழந்தையை வாங்கிக் கொண்டார் ஒரு கடமை முடிந்த திருப்தி" [6]

கண்ணேறு

ஒரு தனியன் தன்னிடமுள்ள ஒருவகை ஆற்றலால் மற்றொரு தனியனை அல்லது அவனது பொருட்களைத் தன் விருப்பாகவோ தன் விருப்பமில்லாமலோ பார்ப்பதாலோ புகழ்வதாலோ தீங்கை உருவாக்குதலைக் கண்ணேறு எனலாம். [7]

"காட்டேறு" என்ற நாவலில் வரும் சண்முகம் வளமான தனது வயற்காணியை அரசு சுவீகரித்துக் கொண்டமைக்கு காரணம் தின சகாயத்தின் கொடிய கண்ணே என நம்புவதாக ஆசிரியர் சித்திரித்துள்ளார். [8]

முற்றத்து ஒற்றைப்பனை என்ற நாவலில் வரும் நீண்ட தலைமுடியையுடைய முத்தர் அம்மான்

"...கொச்சியாற்றை பிராந்துக்கிழவி வந்து ஆ... உதென்ன மயிரடா ஒரு பொம்பிளைக்குக் கூட இப்படி இராது என ஏங்கியது தான் அன்றைக்குப் பட்ட கண்...

எனத் தனது முடிகொட்டிய வரலாற்றைக் கண்ணேறுடன் தொடர்புபடுத்துகிறார். [9]

சகுனம்

நிகழவிருக்கும் நன்மை, தீமைகளை முன்கூட்டியே உணர்த்துவதைச் சகுனம் என்பர். இச்சகுனத்திற் குறிகள் மக்களின் வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. நாவல்களும் சகுனக்குறிகள் குறித்த பல்வேறு செய்திகளை பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

நினைத்தவுடன் தோன்றுதல்

எவரையாவது நினைக்கும் போது குறித்த நபர் உடனேயே தோன்றினால் அவருக்கு ஆயுள் கெட்டி (பலமானது) என்ற நம்பிக்கையினைப் பதிவு செய்ய வந்த ஆசிரியர் "காவோலை"யில்

"...கனகர் சொல்லி வாய்மூடவில்லை கிட்டினன் படலையைத் திறந்து கொண்டு வந்தான். "உனக்கு நூறு வயசடா" கிட்டினா இப்பதான் உன்னை நினைச்சன்"

என்ற உரையாடற் பகுதி மூலம் அதனை மேற்கொண்டுள்ளார்.

நாள்காரியத்தை மீளச் செய்தல்

தொழில் நடைமுறைகளிலும் சில வகையான நம்பிக்கைகள் பின்பற்றப்படுகின்றன. பொதுவாக நாளுக்குச் செய்யப்படும் காரியங்களை மீளவும் செய்ய முற்பட்டால் அது தீமை பயக்கும் என்பது நம்பிக்கை. "வாடைக்காற்று" என்ற நாவலில் நாளுக்கு போடப்பட்ட மீன்வாடியைப் பிடுங்கிப் போட மறுக்கும் மரியதாசின் தயக்கத்தினூடே இந்நம்பிக்கை புலப்படுகின்றது.

முழி விசேடம்

சகுனக்குறி நம்பிக்கையில் முழிவிசேடம் குறித்த நம்பிக்கைகள் மிகவும் பிரசித்தமானவை.

"முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலில் வெளிவரும் முத்தர் அம்மான் தனது பிரயாணம் தடைப்பட்டுப் போனமைக்குக் காரணம் முழிவியளப் பிழையே எனக்கருதுவதாக நாவலாசிரியர் சித்திரித்துள்ளார்.

முடி இறக்குதல்

நேர்ச்சையின் பொருட்டு இறை சந்நிதிகளில் முடி இறக்கிக் கொள்ளும் நம்பிக்கை பரவலாகக் காணப்படுகின்றது.

"காட்டாறு" என்ற நாவலில் வரும் கோபால் மாஸ்டர் தனது மகனுக்கு நேர்ச்சையின் பொருட்டு முடி இறக்கி உள்ளதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"...அதுக்கென்ன இந்தவாரம் புதன் கிழமை பின்னேரம் போக இருக்கிறான். என்ர கடைக் குட்டிக்கு நயினாதீவில் முடியிறக்கிற நேத்தி..." [13]

சத்தியம் செய்தல்

ஒருவர் தனது உறுதியை நிலைநாட்ட சத்தியம் செய்வது வழக்கமாக உள்ளது.

"காட்டாறு" என்ற நாவலிலே தனக்கு மட்டும் தெரிந்த இரகசியம் ஒன்றை கந்தசாமியிடம் தெரிவிக்கும் விதானையார் அதனை வெளியில் யாருக்கும் சொல்ல வேண்டாம் எனச் சத்தியம் வாங்குகிறார்.

"அண்டைக்கு நான் உதவாட்டில் இண்டைக்கு இந்தச் சியான் சரி... உதை சத்தியமா ஒருதருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ..." [14]

"முற்றத்து ஒற்றைப்பனை"யிலே முத்தர் அம்மானின் காற்றாடியின் கயிற்றை வெட்டுவதற்காகக் கத்தியுடன் வந்த அலம்பல் காசியை அவர் முத்தர் அம்மானைக் கொலை செய்ய வந்ததாகவே பொன்னுக்கிழவி சந்தேகப்படுகிறார்.

"... ஐயோ சிவசத்தியமாசுக் சொல்லுறன் நான் கொலை செய்ய வரவில்லை... கொடியை அறுத்து விடத்தான் வந்தேன்." [15]

என அலம்பல் காசியர் தனது உறுதியை நிலைநாட்டுவது குறித்து நாவலாசிரியர் விவரித்துள்ளார்.

விதி

ஒருவர் பிறக்கும் போதே இறைவன் அவரது வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளைத் தலையில் எழுதி விடுவதாக நம்பும் வழக்கம் உலகப் பொதுவானதாக உள்ளது. செங்கையாழியான் இந் நம்பிக்கையினைப் பல்வேறு நிலைகளில் ஆவணப்படுத்தியுள்ளார்.

"காட்டாறு" என்ற நாவலில் வரும் செங்கமலம் தனது வாழாவெட்டி நிலைக்கும் குடும்பத்துக்குப் பாரமாக மூன்று பிள்ளைகளுடன் தாய் வீட்டுக்கே திரும்பி வந்தமைக்கும் காரணம் தனது தலைவிதியே அன்றி வேறில்லை எனக் கருதுகிறார்.

"என்னைக் கண்டாலே அம்மாவிற்குப் பிடிக்காது வாழாவெட்டியாக குடும்பத்துக்குச் சுமையாக வந்திருக்கின்றேன். அது போதாதென்று மூன்று பேராகத் திரும்பி வந்திருக்கின்றேன் என் தலைவிதி"[16]

"காவோலை" என்ற நாவலில் வரும் வசந்தியின் திருமண வாழ்வின் தோல்விக்குக் காரணம் அவரின் தலைவிதியே என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. [17]

வசியம்

ஒரு பெண் குறிப்பிட்ட ஒருவரை மணம் முடிக்கச் சம்மதிக்காவிட்டால் அவளை வசீகரித்து (Black Magic Craft) திருமணம் செய்து கொள்ளும் நம்பிக்கை வழக்கம் இன்றும் நிலவுகிறது.

"காவோலை" என்ற நாவலிலே சுருளி என்பவன் தான் காதலிக்கும் வசந்தா என்பவளைத் திருமணம் செய்வதில் முனைப்புக் காட்டிய போது அவனது தாயானவள் மகனுக்கு அவள் மருந்து போட்டு விடுவதாகவே நம்புகிறாள். இதனை

"நான் வசந்தாவைக் காதலிக்கிறேன். ஐயோ! பாரடா கந்தையா உவளவை என்ர பெடியனுக்கு மருந்து போட்டுட்டாளவை..." [18]

என்ற உரையாடற் பகுதி மூலம் நாவலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

எண்

காரியம் ஒன்றை ஆற்றச் செய்கையில் மூன்று பெயராகச் சென்றால் அக்காரியம் கைகூடி வராது என்பது நம்பிக்கையாகும்.

"காட்டாறு" என்ற நாவலில் வரும் சந்தானம் என்பவருக்கான விளைநிலத்தினைத் தேடும் முயற்சியில் மூவர் ஈடுபட்டிருந்த போது அதனைக் கண்ணுற்ற செல்லாச்சி என்பவள்

"மூன்று பேராகச் சென்றால் ஒரு காரியமும் சரிப்பட்டு வராது..." [19]

எனக் குறிப்பிடுவதன் மூலம் இந்த நம்பிக்கையினை அவள் குரலாகவே ஆசிரியர் பதிவு செய்துள்ளமையினைக் காணமுடிகிறது.

நாட்டுப்புற உணவு வகைகளும் உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளும்

ஈழத்து நாட்டுப்புற மக்களிடையே வழக்கத்தில் உள்ள பல்வேறு வகையான உணவுவகைகள் குறித்தும் அவற்றைக் குறிப்பிட்ட காலம் வரை கெட்டுப்போகாமல் தீ, நீர், எண்ணெய், சூரியவெளிச்சம் முதலானவற்றின் துணைக்கொண்டு பாதுகாக்கும் நடைமுறைகள் குறித்தும் செங்கையாழியான் விரிவான செய்திகளை தந்துள்ளார்.

"காவோலை" என்ற நாவலிலே பனம் பழச்சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் பனாட்டு, பனங்கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் ஒடியல், புளுக்கொடியல் முதலானவற்றை குறித்த செய்திகளும் அவற்றைப் பதப்படுத்துவதும் நடைமுறை குறித்த செய்திகளும் விரிவான நிலையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. [20]

"காட்டாறு" என்ற நாவலில் வரும் கணவதி மற்றும் தாமரைக்கண்டுக் கிழவன் ஆகியோர்க-ளுக்கிடையிலான உரையாடற் பகுதி ஒன்றின்

மூலம் வேட்டையின் போது உபரியாகக் கிடைக்கின்ற இறைச்சியினை தீயிலிட்டு வாட்டுதல் செய்வதன் மூலம் குறிப்பிட்ட காலம் வரை அதனைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் நடைமுறையினை செங்கையாழியான் விரிவான நிலையில் ஆவணப்படுத்தியுள்ளார்.

"மான் மரைகளைச் சுட்டால் அப்படியே உரிச்சுப்போட்டு வத்தலாக்கிறம் பன்றி என்றால் மட்டும் ஏன் வாட்டி பின் உரித்து வதக்க வேண்டும் என்று கேட்டான் கணபதி. பன்றியில் சரியான சிறுசிறு உண்ணிகள் இருக்கும் செத்தாலும் அவை தோலை விட்டுநீங்காது கண்டியோ. ஒருக்கா வாட்டினால் எல்லாம் செத்திடும் மற்றது பன்றியில் அதன்ர தோல் அதுதான் வார். சரியானருசி நல்லா வாட்டாட்டில் வாருக்குள்ள இருக்கின்ற அடி மயிர் கத்த எரியாது. பன்றியில இருக்கிற கொழுப்பில இறைச்சி முழுதும் உருகினால் தனி மணம் அதுக்குத்தான்." [21]

நாட்டார் கைவினைக்கலை

நாவல்களில் பயின்றுள்ள கைவினைப் பொருட்களில் பெரும்பாலானவை பனை ஓலை மற்றும் பனைநார்களால் வடிவமைக்கப்பட்ட-னவாகவே காணப்படுதல் வழமையாகும்.

"காவோலை" என்ற நாவலிலே நாட்டுப்புற மக்களிடையே புழக்கத்தில் உள்ள பல்வேறு வகையான புழங்கு பொருட்கள் குறித்த செய்திகள் பயின்றுள்ளன. பல்வகைக் கடகங்கள் (பனை ஓலைப்பெட்டி), பனை மட்டை வரிச்சல் (வேலிகள்), பனைநார் கொண்டு பின்னப்படும் கடகங்கள் முதலானவை இவற்றுட் குறிப்பிடத்த க்கனவாகவே உள்ளன

குஞ்சியாச்சி என்பவளினால் இளைக்கப்படு-கின்ற பனைநார் கடகத்தின் நேர்த்தி மற்றும் அதன் செயல்முறை குறித்த விவரணம் வருமாறு.

"..குஞ்சியாச்சி இழைக்கின்ற நார்க்கடகங்களுக்கு அந்த ஊரில் மிகவும் தட்டுப்பாடு குருத்தோலைகளைச் சீராக வார்க்கின்ற திறனும் நீக்கலின்றி நார்களை பின்னுகின்ற சீரும் எல்லோருக்கும் இலகுவில் கை வந்த கலையல்ல..." [22]

"முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலில் வரும் முத்தர் அம்மான் பல்வேறு விதமான காற்றாடிகளையும் அவற்றிலே பொருத்தப்படுகின்ற "விண்" என்ற ஒலியெழுப்பு கருவியினையும் நேர்த்தியாக வடிவமைப்பதில் வல்லவராகக் காட்டப்பட்டுள்ளார். காற்றாடித் தயாரிப்பின் பல்வகை நுட்பங்கள் குறித்தும் இந்நாவல் விரிவாக விவரணம் செய்கிறது." [23]

நாட்டுப்புற விளையாட்டு

நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் இணைந்தவையாக நாட்டுப்புற விளையாட்டுக்கள் காணப்படுகின்றன.

பருவகால நாட்டுப்புற விளையாட்டுக்களில் காற்றாடி விடுதல் என்பது பிரதானமான ஒன்றாக உள்ளது. செங்கையாழியானின் "முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலில் "பட்டம் விடுதல்" என்ற நாட்டுப்புற விளையாட்டைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்டதாக அமைந்துள்ளமை கருதத்தக்கதாகும்.

மேற்படி நாவலில் மாரிமுத்துவிற்கும் அவரது மனைவி பொன்னுக்கிழவிக்கும் இடையில் நடைபெறும் உரையாடற் பகுதியில் பல்வகைக் காற்றாடிகள் குறித்த செய்திகள் கிடைக்கின்றன.

"கொடி ஏத்துறது ஒரு கலையடி பொன்னு ...எட்டுமூலை கொக்கு பிராந்துக்கொடிகளை நூலிலைப்பிசகாமல் கட்டி வானத்தில் கம்பீரமாகப் பறக்கவிட ஆர் இருக்கினம்.." [24]

முத்தர் அம்மானின் கைவண்ணத்தில் உருவான பட்டம் பற்றிய வருணனை பின்வருமாறு அமைகின்றது.

"தலைவாசல் திண்ணையில் நான்கு அடி நீளத்திற்கு குறையாத கொக்குக் காற்றாடி ஒன்று மினுமினுத்தபடி கிடந்தது. பக்கத்தில் பெரிய உருண்டை நூல் பந்து ஒன்று நூல் பென்சில் தடிப்பிருக்கும் பெரிய கொக்கு ஒன்று இறகுகளை விரித்த படி சொண்டையும் கழுத்தையும் மேலே தூக்கியவாறு மல்லாந்து கிடப்பது போல இருந்தது. இறகுகளின் விரிப்பு, வாலிறகின் பரவல், கழுத்தின் வளைவு என்பன யாவும் அளவோடு காற்றின் பரப்பில் மிதக்கத்தக்கனவாக அமைந்திருந்தன. வெள்ளை வெளேர் என்ற நிறம் கழுத்துச்சிறகுகள் கூட அற்புதமாக இருந்தன". [25]

மேற்படி நாவலிலே பட்டத்தயாரிப்பில் பயன்படும் பல்வகைப் பொருட்கள், தயாரிப்பு நுட்பங்கள், அவற்றை வானத்தில் ஏற்றும் முறை முதலான பல்வேறு விடயங்களும் விரிவான நிலையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப்புற மருத்துவம்

உடல்வலி, தலைவலி, உடற்சூடு, கண்ணேறு முதலான நோய்கள் பற்றியும் அவற்றிற்கான பாரம்பரிய மருத்துவ நடைமுறைகள் குறித்தும் காவோலை, காட்டாறு, முற்றத்து ஒற்றைப்பனை ஆகிய நாவல்களிலே செய்திகள் பயின்றுள்ளன.

"காட்டாறு" என்ற நாவலிலே தலைவலிக்கு மருந்தாக மல்லியை அவித்துக் குடிக்கும் நடைமுறை குறித்த செய்தி காணப்படுகிறது.[26]

பட்டப் பெயரிடும் வழக்கம் (Nick Name)

பெயர்களுடன் தொடர்புடைய வழக்காறுகளில் பட்டப் பெயர்களும் உள்ளடங்குகின்றன. நாட்டுப்புற வழக்கில் இயற்பெயருக்கு மேலதிகமாகப் பல்வேறு வகையான பட்டப்பெயர்கள் புழக்கத்திலிருப்பது சாதாரண நடைமுறையாகும். உடற்தோற்றப்பொலிவு, பண்பு, தொழில், செயல், ஊர், சாதி முதலான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவை வழங்கி வருகின்றன.

"முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலில் வரும் மாரிமுத்தர் என்பவர் கொக்கர் மாரிமுத்தர் என்ற பட்டப் பெயர் கொண்டு அழைக்கப்படும் பின்னணியைச் செங்கையாழியான் பின்வருமாறு விவரிப்பர்.

"மாரிமுத்தர் அம்மானைத் தெரியாதவர்கள் வண்ணார் பண்ணையில் கிடையாது. கொக்கர் மாரிமுத்து என்றால் வயது போன யாவருக்கும் அவர் யாரென்று தெரிந்து விடும். காற்றாடி கட்டி ஏற்றுவதில் மாரிமுத்தர எவரும் மிஞ்சமுடியாது. சிறு வயதிலிருந்தே விதம் விதமான காற்றாடிகளைக் கட்டி சோளகக் காற்றிலே பறக்க விட்டிருக்கின்றார். எழுபது வயதாகியும் காற்றாடி விடுகின்ற அந்தப்பழக்கம் வெறிதீரவில்லை. கொக்குக் கொடி கட்டுவதில் மாரிமுத்தர் வெகு திறமைசாலி. ஆளும் ஆறரையடி உயரம். அதனால "கொக்கர்" என்ற பட்டமும்: அவரது பெயரோடு ஒட்டிக்கொண்டது.[27]

வல்லிபுரம் பேத்தைவல்லி என்ற பட்டப்பெயர் கொண்டு அழைக்கப்படும் காரணத்தை வருமாறு செங்கையழியான் விவரிக்கிறார்.

"பனங்களையும் தென்னங்களையும் முட்டி முட்டியாகக் குடித்ததனால் வயிறு பொங்கல் பானை போல முன்னால் தொங்கியது. வெண்மண்டைக் கால்களும் கைகளும் மிக மெலிந்தவை. பெயரும் வலு பொருத்தம்.'[28]

தவளை, மீன் ஆகிய இனங்களில் "பேத்தை" என்றொரு வகையுண்டு. இவ்வகை உயிரினங்களின் வயிற்றுப்பகுதி எந்நேரமும் உப்பிப் பெருத்துக் காணப்படும். இவை தொந்தி

பெருத்தவர்களுக்கு உவமையாகியமை நாட்டுப்புற மக்களின் நகைச்சுவை உணர்விற்கும் ஒப்புவமை கூறும் திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

பேச்சு மொழிப்பயன்பாடு

ஆய்வுக்குரிய நாவல்கள் அவ்வப் பிரதேசங்களுக்குரிய பேச்சு வழக்குப் பண்புகளைப் பெருமளவுக்கு உள்வாங்கியுள்ள-மையினைக் காணமுடிகின்றது.

"ஏன் கணபதி கவலைப்படுகிறாய் நீ என்னட்ட வந்து அப்பவே கேட்டிருந்தா என்ர மூண்டு சோடி மாடுகளையும் வயலுக்க இறக்கி இருப்பன்..."[29]
"என்ரை மகனைப் பற்றி எனக்கே புளுகிறாங்கள்"[30]
"என்ர வயல் என்ர மனிசி போல"[31]
"உது தோட்டம் செய்ய சரியான காணியில்ல.[32]
"இண்டைக்கு வெள்ளிக்கிழமை நான் விரதம்..."[33]
"என்ன விசயமெண்டு எனக்குத் தெரியும்..."[34]

மேற்படி உரையாடல்களில் வரும் "என்னட்ட", "அப்பவே", "என்ர", "மூண்டு", "மனிசி", "இண்டைக்கு" முதலிய சொற்கள் பேச்சு மொழிச் சாயலிலேயே வழங்கியுள்ளன. எழுத்து வழக்கில் இவை முறையே என்னிடம், அப்பொழுதே, என்னுடைய, மூன்று, மனைவி, இன்றைக்கு என அமைதல் வழக்கமாகும்.

நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய கிராமங்களைக் களமாகக் கொண்டமைந்த நாவல்களில் அப்பிரதேசங்களுக்கே சிறப்பாக அமைந்த சிலமொழி வழக்குகளைச் செங்கையாழியான் ஆவணப்படுத்தியுள்ளார்.

"எப்ப அண்ணை வந்தியள்" நான் வந்து நாலு நாளாகுது தங்கச்சி கண்டாலும் காணாதது போல போகிறியள்" [34]

எங்கட தீவு பல வழிகளிலும் வித்தியாசமானது. நம்மட கந்த புராண கலாச்சாரம் வருமே"[35]

"உங்கட ஆக்களுக்கு நாகரிகம் கற்றுக் கொடுப்பளவை"[36]

வந்தியள், போகிறியள், நாம, நமக்கு, நம்மட,கண்டியோ முதலான பேச்சு மொழிச் சொற்பிரயோகங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொதுவாகவும் தீவுப்பிரதேசங்களில் குறிப்பாகவும் வழங்கிவரும் சொற்களாக உள்ளமை கருதத்தக்கதாகும்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஆகிய எண் பெயர்கள் பேச்சு மொழி வழக்கில் முறையே ஒண்டு, ரெண்டு, மூண்டு, நாலு, அஞ்சு (ஐஞ்சு) என வழங்குதல் மரபாக உள்ளது. அதனையும் இந் நாவல்களின் உரையாடற் பகுதியில் காணமுடிகிறது.

"நீ ஒண்டும் செய்யாதை"[37]
"ரெண்டு மாதத்துக்கு முந்தி"[38]
"மூண்டு வரியம் தான் இருக்கிறது"[39]

"நீ போயிடாதை.. இரு.. நிலாக்கொடி கண்டியோ"[40]
"முத்தர் அம்மானை எங்கையாவது அஞ்சு நாட்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்"[41]

பழமொழிப் பயன்பாடு

வழக்கு மொழியில் வாழ்வியலுக்குப் பொருத்தமாகத் தொன்று தொட்டே பொருளைச் சுருங்கிய சொற்களில் செவிக்கு இனிமையாகக் கூறி விளங்க வைக்கும் பெரு வழக்குத் தொடர்களைப் பழமொழி எனலாம்.

நாவல்களில் பயின்றுள்ள பழமொழிகள் கதைக் கருவினை விளக்கப் பயன்பட்டுள்ளமை-யினைக் காணமுடிகிறது.

"வாடைக்காற்று" என்ற நாவலில் வரும் விருத்தாசலம் தனது முறை மச்சாளான நாகம்மா மீது காதல் கொள்கிறான். விருத்தாசலத்தின் காதலை ஏற்றுக்கொள்ளாத நாகம்மா பொருளாதார நிலையில் மிகவும் மேம்பட்டவனான மரியதாசின் மீது மையல் கொள்கிறாள். நாகம்மா தனக்கு கிடைக்காத ஏக்கம் பற்றிக் குறிப்பிடும் விருத்தாசலம்

"முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக் கூடாது"[42] என்ற பழமொழியை முணுமுணுத்து அமைதி கொள்வதாக நாவலாசிரியர் சித்திரித்துள்ளார்.

மேற்படி நாவலில் வரும் விருத்தாசலம் தனது முறை மச்சாளான நாகம்மா தனக்கே உரியவள் என்ற நம்பிக்கையில் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது இருந்து விடுகிறான். அவனது அக்கறையின்மையினையும் நாகம்மாவின் கள்ளக் காதலையும் விளக்க வந்த நாவலாசிரியர்

"செட்டை முளைத்தால் கிளி பொந்தில் இருக்காது"[42]

"பழம் பழுத்தால் வௌவால் விழாமல் இருக்காது"[43]

ஆகிய பழமொழிகள் மூலம் விருத்ததாசலத்தின் நம்பிக்கைக்கு நேர்மாறான நடத்தை முறையினை விளக்கியுள்ளார்.

முடிவுரை

ஆய்வுக்குரிய நாவல்களில் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பலவும் ஒரு கருத்தியல் நோக்கில் பயின்று வந்துள்ளமையினைக் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் தனது நாவல்களில் கச்சிதமாக சிறைப்படுத்தியதன் மூலம் கே. டானியலைப் போலவே தன்னையும் ஒரு பண்பாட்டு மானிடவியலாளராகச் செங்கையாழியான் இனங்காட்டியுள்ளார்.

நாவல்களில் பயின்றுள்ள நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் குறித்த நாவல்களின் புனை திறனுக்குச் சூழல் மற்றும் படைப்பு நுட்பம் என்னும் இரு நிலைகளில் பயன்பட்டுள்ளமை புலனாகிறது.

நாவல்களில் நாட்டார் பண்பாட்டு கூறுகளின் பயில் நிலைக்குப் பின்வரும் காரணங்களைக் கருத்திற் கொள்ளலாம் போலத் தெரிகிறது. நாட்டுப்புறப் பண்பாட்டை அதன் மரபைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். பேணி அடுத்த தலைமுறையினருக்கும் கையளிக்க வேண்டும் என்ற விருப்பார்வம் இதனை "முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை கருதத்தக்கது. ஈழத்து இலக்கியத் தடத்தில் மரபு, மண்வாசனை, தேசியம் முதலிய பண்புகள் வலியுறுத்தப்பட்டமை படைப்பாளர் தம் மாக்சிய சிந்தனைச் சார்பு முதலானவையே அவையாகும்.

ஈழத்தமிழர் தம் பண்பாட்டு மரபுகளை அதன் வேர்களை இனங்கண்டு மீட்டுருவாக்கம் செய்ய இவ்வாறான வட்டாரப்பண்பு நாவல்கள் பெரிதும் துணைபுரியும் எனக் கருதலாம்.

அடிக்குறிப்புகள்

01. செங்கையாழியான் காட்டாறு (முதற்பதிப்பு) வீரகேசரி வெளியீடு, கொழும்பு 1977 முன்னுரை
02. சிவத்தம்பி. கா செங்கையாழியான் நாவல்கள் (இந்நாடு உருப்படாது, பிரளயம், முற்றத்து ஒற்றைப்பனை, கிடுகுவேலி, மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, ஒரு மைய விட்டங்கள்) கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம் 1992 முன்னுரை
03. வீராசாமி.கா.வே தமிழ் நாவல் முன்னோட்டம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர் 1973 பக்.25
04. மனோகரன் துரை, "பிரதேச நாவல்கள்", யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் தென்னாசியாவில் ஆய்வரங்குக் கட்டுரை 1976 (தட்டச்சுப்பிரதி) பக்.1
05. The New Encyclopedia Britanica (micro) Encyclopedia Britanica Inc. William Benton Publisher, Chicago, U.S.A. 1973-1974, P.469
06. செங்கையாழியான், காவேலை, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம் 1994, பக்.73-74
07. Alan Dundes, Interpreting Folklore, Bloomington, Indian University Press 1980. P.93

08. காட்டாறு. பக்.173
09. முற்றத்து ஒற்றைப்பனை பக்.46
10. செங்கையாழியான், காவோலை, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம் 1994. பக்கம் 54
11. செங்கையாழியான் வாடைக்காற்று, வீரகேசரி வெளியீடு, கொழும்பு 1973. பக்.38
12. முற்றத்து ஒற்றைப்பனை, பக்.46.
13. காட்டாறு, பக்.64.
14. காட்டாறு, பக்.12.
15. முற்றத்து ஒற்றைப்பனை, பக்.39.
16. காட்டாறு, பக்.28.
17. காவோலை, பக்.17.
18. மேலது, பக்.32.
19. காட்டாறு, பக்.144.
20. காவோலை, பக்.16.
21. காட்டாறு, பக்.20.
22. காவோலை, பக்.27.
23. முற்றத்து ஒற்றைப்பனை, பக்.23.
24. மேலது, பக்.03.
25. மேலது, பக்.22-23.
26. காட்டாறு, பக்.116.
27. முற்றத்து ஒற்றைப்பனை, பக்.4-5.
28. மேலது, பக்.40.
29. காட்டாறு, பக்.198.
30. முற்றத்து ஒற்றைப்பனை, பக்.19
31. காட்டாறு, பக்.198.
32. மேலது, பக்.141.
33. மேலது, பக்.94-95.
34. வாடைக்காற்று, பக்.63.
35. காவோலை, பக்.67-68.
36. மேலது, பக்.68.
37. வாடைக்காற்று, பக்.4.
38. காட்டாறு, பக்.3.
39. மேலது, பக்.113.
40. முற்றத்து ஒற்றைப்பனை, பக்23.
41. மேலது, பக்.32.
42. வாடைக்காற்று, பக்.127.
43. மேலது, பக்.115.